# பிரேம வாஹினி

பகவான்

ஸ்ரீ சத்ய சாயி பாபா

47. Be humane not demonic

**மானவர்கள் தானவர்களின் வேறுபட்ட இயல்புகள்:**

(மானவர்கள்) மனிதர்கள் அன்பு (ப்ரேமை) நிரம்பியவர்கள். அவர்களது இதயங்கள் கருணை பொங்கும் ஊற்றுக்கள். அவர்கள் உண்மையே பேசுவார்கள்.

சாந்தியே மனித மனத்தின் சிறப்பியல்பு. மனதின் அந்தரங்க இயல்பு அது. சாந்தியைத் தேடி எங்கும் அலைய வேண்டியதில்லை. தங்கமும் வெள்ளியும் மண்ணிலும், முத்துக்களும் பவளங்களும் கடலிலும் மறைந்திருப்பதைப் போல இன்பமும் சாந்தியும் மனதின் செயல்பாடுகளில் மறைந்துள்ளன; மறைந்துள்ள இந்தப் புதையல்களை அடையும் ஆவலுடன் ஆழ நீந்தினால், தன் மனதை அகமுகமாகத் திருப்பினால், அதன்பின் அவர் ப்ரேமை நிரம்பியவர் ஆகிவிடுவார். அந்த அன்பு நிரம்பியவர்கள், அந்த அன்பு ஒளியில் வாழ்பவர்கள் மட்டுமே மனிதர்கள் என அழைக்கப்படுவர். அன்பு இல்லாதவர்கள் (தானவர்கள்) அரக்கர்கள்;

மனித நிலையிலிருந்து தாழ்ந்தவர்கள் அந்தப் புனிதமான அன்பு தோன்றுவதும் மறைவதுமாக உள்ள ஒன்று அல்ல, மாற்றமில்லாமல் எப்போதும் இருப்பது அது. பிரிக்கமுடியாத ஒன்று அது. அன்பு உறையப் பெற்றவர்களிடம் சுயநலம், அநீதி, தவறு, தீயொழுக்கம், வஞ்சம் முதலிய தீய இயல்புகளைக் காண இயலாது; ஆனால் அன்பு இல்லாதவர்களிடம் மேலே கூறப்பட்ட இயல்புகள் மற்ற எதையும்விட எப்போதும் அதிகமாக இருக்கும். அன்பை மிதிப்பவர்களும் இழிகுணங்களை முக்கியமானவைகளாகக் கருதுவோர்களும் தானவர்கள். மானவர்கள் அந்தத் தீய இயல்புகளைக் கொல்லப்பட வேண்டிய பாம்பாகவும், அன்பு ஒன்றே பேண வேண்டிய இயல்பு என்றும் கருதுபவர்கள். தீய நடத்தையும் தீய பழக்கங்களும் மனிதனின் மனிதத்தன்மையை பாழ்படுத்துபவை. அன்பு எனும் அமுது நிரம்பிய இதயங்கள் மனிதனிடமுள்ள உண்மையான மனிதனைச் சுட்டிக்காட்டுபவை. மாசுபடாத, சுயநலமற்ற, கலப்படமில்லாத, இடைவிடாத அன்பு என்பதே ப்ரேமை அல்லது அன்பு என்பதன் பொருளாகும்.

மானவம் தானவம் இரண்டுக்குமிடையே வேறுபட்டிருப்பது 'மா' 'தா' மட்டுமே. 'மா' எனும் எழுத்து மென்மையானது. இனிமையானது. அழியாச் சின்னமாகத் திகழ்வது. ஆனால் 'தா' எனும் ஒலி இரக்கமற்றது. சட்டமற்றது, சுட்டெரிப்பது. தம்மிடம் இனிமை இல்லாதவர்களும் அழியாதவற்றை அடைய பொங்கி எழும் உந்து ஆற்றலை (உத்வேகம்) அழுத்தி வைப்போரும் மனிதர்களா? அவர்கள் மானிட வடிவம் பெற்றிருப்பினும் அவர்களுடைய இயல்பு அரக்கர்களுடையதே! ஏனெனில் முக்கியமானது ஒழுக்கமேயன்றி வடிவம் அல்ல. ஒழுக்கமும் அன்பும் பெறாமல் தானவர்களின் இயல்புகளையும் உடல்களையும் தாங்கியவர்களை மனிதர்கள் என்று எப்படி அழைப்பது? முடியாது.

இப்போது எனது சொற்பொழிவில் பயன்படுத்தப்படும் சொற்கள் வடிவத்தையொட்டிப் பயன்படுத்தப்பட்டவையல்ல. மனிதர்களின் குணங்களை அடிப்படையாகக் கொண்டவை அவை. மனிதர்களிடையே தானவர்கள் பெருமளவில் உள்ளனர். இரு பிரிவினரும் ஒன்றுபோல தோன்றுகின்றனர்; ஆனால் அவர்களது இயல்புகள்தான் மானவர்களாகவும், தானவர்களாகவும் வேறுபடுத்துகின்றன. மானவர்கள் தாங்களாகவே மென்மையான, இனிமையான, அன்பான, ஒழுக்கமான, சத்தியமான செயல்களில் ஈடுபடுகிறார்கள்; ஒரு பிரிவினர் தங்களை உணர்வதற்கும், அழியாப்பேற்றை அடைவதற்குமுரிய வாய்ப்பு இருக்கிறது என்பதற்கான சான்றுகளாகத் திகழ்கிறார்கள். அவர்களது முகத்தில் ஒளிரும் ஆனந்தத்தின் மூலம் அவர்களது நல்லியல்பு பிரதிபலிக்கிறது; ஆனால் அந்த நல்லியல்பு இல்லாமல் ஒருவர் இன்முகத்துடன் காணப்பட்டால், அது தானவர்களின் அழிக்கும் (நெருப்பு) இயல்பின் அறிகுறியாகும்; அது ஆனந்தத்தின் அருளைப் பெற்றதாக இருக்காது.

**நேற்றைய செயல்களே இன்றைய சொற்கள்**

**48. Develop the characteristics of genuine devotees**

## ஆன்மீக சாதகர்களின் சிறப்பியல்புகளை வளர்த்துக்கொள்ளுங்கள்

த்ரேதா யுகத்தில் தாசர்கள், சாதகர்கள் அல்லது ஆன்மீக சாதகர்களின் இயல்பும் சிறப்பம்சங்களும் எப்படியுருக்குமென்று ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியிடம் நாரதர் கேட்டதற்கு அவர் பின்வருமாறு பதிலளித்தார்:

“ ஓ நாரதா! கவனி; எனது தாசர்கள் அன்பு நிரம்பிய மனிதர்களாக இருப்பார்கள்; அவர்கள் தர்மத்தை எப்போதும் பின்பற்றுவார்கள்; சத்தியத்தைப் பேசுவார்கள். அவர்களது இதயங்கள் கருணையால் உருகும்; அவர்கள் தவறு செய்ய மாட்டார்கள்; பாவத்தைத் தவிர்ப்பார்கள்; நல்ல அடிப்படை கொண்டது அவர்களின் இயல்பு; அவர்கள் அனைத்தையும் மகிழ்ச்சியுடன் துறப்பார்கள்; ஓரளவே உண்பார்கள்; மற்றவர்களுக்கு நன்மையே செய்வார்கள்; அவர்களிடம் சுய நலமிருக்காது; சந்தேகங்கள் அவர்களை வாட்டுவதில்லை; புகழ்ச்சிக்கு அவர்கள் செவிசாய்ப்பதில்லை. மற்றவர்களின் நல் இயல்புகளைப் புகழ்ந்து பாராட்டும்போது அவர்கள் ஆர்வத்துடன் கேட்பார்கள். அவர்களிடம் அழகான, வலிமையான, புனிதமான நடத்தை இருக்கும். அப்படிப்பட்ட இயல்புகளைப் பெற முயல்பவர்களும், நடத்தை உடையவர்களும் மட்டுமே சாதகர்கள். இப்போது எனக்குப் பிரியமானவர்களைப் பர்றிச் சொல்லுகிறேன். ஜபம், தபம், விரதத்தில் ஈடுபடுவோருள் சுயக்கட்டுப்பாடு, ஒழுக்கம், ஆழ்ந்த நம்பிக்கை, பொறுமை, தோழமை, அன்பும் இன்பமும் உடையவர்களும் என்மீது கலப்பற்ற ப்ரேமை செலுத்துவோர் முதலியோரும் எனக்கு பிரியமானவர்கள்”.

”இப்போது எனது உண்மையான பக்தர்கள் பற்றிக் கூறுகிறேன். (விவேகம், வைராக்யம், விரயம், விஞ்ஞானம்) பகுத்தறிவு, பற்றற்றிருத்தல், பணிவு, உண்மையான விழிப்புணர்வு முதலியவை உடையோர் எனது லீலைகளில்

எப்போதும் ஆழ்ந்திருப்போர். எல்லா நேரங்களிலும் சந்தர்ப்பங்களிலும் என் நாமத்தை நினைப்பவர்கள். இறை நாமம் எந்த உதட்டிலுருந்து வந்தாலும் அதைக்கேட்டு அன்புடன் கண்ணீர் சொரிபவர்கள் முதலியோர் எனது உண்மையான பக்தர்கள்".

ஸ்ரீ ராமர் நாரதருக்கு இப்படி பதில் அளித்தார். தாய் சேயைக் காப்பதுப்போல், பசு ஆபத்திலிருந்து கன்றைக் காப்பற்றுவது போல் இமைகள் விழிகளைக் காப்பது போல் எப்போதும் எந்நேரமும் தன்மீது முழுமையான, தூய்மையான பக்தி செலுத்தும் பக்தனை பகவான் காப்பாற்றுவார்.

குழந்தை வாலிபம் அடைந்தபின் தாய் அதைப் பாதுகாக்க அதிகக் கவனம் செலுத்துவதில்லை. அதைபோலவே பகவானும் ஞானிகள்மீது அதிக கவனம் செலுத்துவதில்லை. சகுண பக்தர்கள் குழந்தையைப் போன்றவர்கள். அதற்கு இறைவலிமையைத் தவிர தனக்கென்று சொந்த வலிமை இல்லை. ஞானிக்கு அவரது சொந்த வலிமையே போதும்.

**49. Surrender completely to the Lord**

### இறைவனிடம் முழுமையாக சரணடை

எனவே ஒருவர் வலிமை பெறும்வரை அவர் இறைவனின் கரங்களில் குழந்தையாகவே இருக்கவேண்டும். சகுண பக்தனாக இல்லாமல் யாருமே நிர்குண பக்தனாக இருக்க முடியாது.. எனவே பக்தர்கள் அன்னை மடியில் உள்ள குழந்தையைபோல் வளரவேண்டும்.. அதன்பின் தனது வலிமையை நம்பும் ஞானியாக சுதந்திரமாக இயங்க வேண்டும்.. அதுவரை இருவருக்கும் ஆதாரம் அன்னைதான். பக்திமார்க்கத்திலுள்ள இந்த ரகசியத்தை உணர்ந்து, பக்தி ஒன்றையே குறிகோளாகக் கொண்டு வளர்ந்து, தங்கள் நடத்தைகளுக்குரிய பண்புகளை வலுப்படுத்தி, இறைவன் மடியில் தவழும் குழவிகளாகத் தாங்களாகவே மாற, இறைவனின் விருப்பப்படி ஒவ்வொன்றையும் செய்து முடிப்போர் உள்ளபடியே பெரும் புண்ணியம் செய்தவர்கள் என்பது சத்தியம்.

எனவே தாசர்களாக முயல்வோர் அவரவர்க்குரிய நாமத்தையும் மார்க்கத்தையும் தேர்ந்தெடுத்து அதற்கேற்ப வாழவேண்டும்.. மேலே குறிப்பிட்ட பக்திக்குரிய சிறப்பியல்புகளை பக்தன் வளர்த்துக் கொள்ள வேண்டும். ப்ரியர்கள் இறைவன் மீது ப்ரேமை கொள்ள வேண்டும்.. அனன்ய பக்தர்கள் இறைவனை முழுமையாகச் சரணடைந்துவிட வேண்டும்.

**50, The Nine Paths of Devotion**

### பக்திக்கான ஒன்பது பாதைகள்

வெறும் படிப்பால், நாவைச் சுழற்றுவதால் பயன் இல்லை. செயலின் விளைவே ஆனந்தம். இந்த ஆனந்தம் ஜாதி, இனம் அல்லது பாலைச் (ஆண்பெண்) சார்ந்ததல்ல; அந்த நாளில் கூட ஸ்ரீ ராமன் சபரியிடம் வந்தபோது, சபரியால் தேர்ந்தெடுக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு, ருசி பார்க்கப்பட்ட கிழங்குகள், கனிகள்

கொண்ட விருந்தில் ராமன் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டபோது அவள் அவரிடம் பின்வருமாறு வேண்டினாள்.

"ப்ரபோ! நானோ ஒரு பெண், அத்துடன் அறிவில் சிறியவள். அனைத்துக்கும் மேலாக நான் ஒரு தாழ்ந்த பிறப்பினள். நான் எப்படி தங்களைப் போற்றமுடியும்? என்ன செய்வது? எப்படி செய்வதென்று எனக்குப் புரியவில்லை!" அதற்கு ராமர் புன்னகைத்த வண்ணம் பதில் கூறினார். "சபரி! பக்தி மூலம் உறவு கொள்வதே என் நோக்கம். ஜாதி, இன அடிப்படையில் நான் உறவு கொண்டாடுவதில்லை. பக்தி இல்லாத அந்தஸ்து, சொத்து, நன்னடத்தையால் என்ன பயன்? மழை பொழியாத மேகம் விண்ணில் அலைவதைப் போல பக்தி இல்லாத மக்கள் (அவர்களது ஜாதி அந்தஸ்து, சொத்து, அதிகாரம், புகழ் எப்படிப்பட்டதாக இருப்பினும்) காற்றின் கருணையை எதிர்பார்த்த வண்ணம் இருக்கிறார்கள். பக்தர்கள் ஒன்பது வழிகளில் ஒன்றைப் பின்பற்றி என்னை அடைகிறார்கள்".

**"ஸ்ரவணம், கீர்த்தனம், விஷ்ணுஸ்மரணம், பாதசேவனம்**

**வந்தனம் அர்ச்சனம் தாஸ்யம் ஸ்நேகம் ஆத்ம நிவேதனம்"**

இவற்றில் ஒரு வழியை பக்தன் பின்பற்றினால் அவன் என்னை அடையக்கூடும். இந்த 9 வகை பக்திகளுக்குத் தான் கட்டுப்பட்டவன். அதனால்தான் இத்துணை எளிதாக என்னை உன்னால் பார்க்கவும், பேசவும், தொடவும் முடிந்தது; யோகிக்களுக்கும் கிட்டாத அரிய வாய்ப்பு இது. வாழ்வின் குறிக்கோளை இன்று உணர்ந்துவிட்டாய். நேற்றைய செயல்களின் விளைவே இன்றைய சொற்கள் என்பதைத் தெரிந்து கொள்.

**51. Devotion is of two kinds : Efforful devotion and self-surrender**

### இருவகை பக்தி:

மேற்படி ஒன்பது பிரிவுகளை இருவகைப்படுத்தலாம். 1) கடினமான பாதையில் செல்வோர், 2) எளிய, பாதுகாப்பான வழியில் செல்வோர். இவற்றை 1) பக்தி, 2) ப்ரபத்தி என்றும் சில சமயம் குறிப்பிடுவர். அதாவது குரங்குக்குட்டி (மர்கடகிசோரா) முறையைப் பின்பற்றுவது பக்தி எனப்படும். பூனைக்குட்டி (மர்ஜலகிசோரா) முறையைப் பின்பற்றுவது ப்ரபத்தி எனப்படும்.

ஒன்றிலிருந்து இன்னொரு பாத்திரத்துக்கு மாற்றும் போது வடியும் எண்ணையைப்போல் பக்தி இடைவிடாமல் தடைப்படாமல் இருக்க வேண்டும். இரண்டும் அடிப்படையில் ஒன்றானாலும் நடைமுறையில் வேறுபாடு உள்ளது. ப்ரேமை இல்லாமல் உலகில் எதையும் அடையமுடியாது. ப்ரேமை இருந்தால்தான் பற்று (அனுராகம்) பாதுகாத்துப்பேணும் ஆசையை உருவாக்கும். மேற்படி இரண்டிலும் ப்ரேமை சமமாக இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை; ஆனால் அதைச் செயல்படுத்துவதில் வேறுபாடு இருக்கிறது. மர்கடகிசோர மார்க்கத்தில் சேய் தன்னைப் பாதுகாக்க தன் வலிமையையே நம்ப வேண்டியுள்ளது. தாய்க்குரங்கு எங்குத் தாவினும் சேய் தாயின் அடிவயிற்றை

இறுகப்பற்ற வேண்டியுள்ளது; பிடித்து இழுத்தாலும் சேய் தன் பிடியைத் தளரவிடக்கூடாது? அதைப் போலவே இறைவன் எந்த நேரத்தில், எந்தச் சந்தர்ப்பத்தில் சோதித்தாலும் அதை எதிர்கொள்ள பக்தன் தயாராக இருக்கவேண்டும். அப்போது களைப்பு, வெறுப்பு அல்லது சலிப்பின் அடிச்சுவடுகூட இல்லாதிருத்தல் வேண்டும்; உலகின் ஏச்சுக்களையும், பேச்சுக்களையும் பொறுத்துக் கொண்டு, அவமானம், தோல்வி உணர்வுகளை வெற்றிக் கொள்ளவேண்டும். இவ்வகை பக்திக்கு முதல்தரமான எடுத்துகாட்டாகத் திகழ்ந்தவன் பிரகலாதன்.

ப்ரபத்திமார்க்கம் இப்படிப்பட்டதல்ல; பூனைக்குட்டியைப் (மர்ஜலகிசோர)_ போன்ற 'சர்வபார சமர்ப்பித' மனப்பான்மை உடையது இது. தாய்ப்பூனையின் மீது பாரம் அனைத்தையும் சுமத்திவிட்டு குட்டி ஓரிடத்தில் இருந்து கொண்டு 'மியா, மியா' எனக் கத்துவதைப் போன்று பக்தன் இறைவன்மீது முழு நம்பிக்கை வைக்கிறான். தாய்ப் பூனை குட்டியை வாயில் கவ்விக்கொள்கிறது, அதிக உயரமான இடத்துக்கு எடுத்துச் செல்கிறது; குறுகலான வழிகளில் கூட பாதுகாப்பாகத் தூக்கிச் செல்கிறது. அதைப் போலவே பக்தனும் பாரம் முழுவதையும் பகவான் மீது சுமத்திவிட்டு அவருடைய விருப்பத்துக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து விடுகிறான். இந்த மார்க்கத்துக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவன் லக்ஷ்மணன்.

ப்ரபக்திக்குரிய கட்டுப்பாடு, பக்திகுரிய கட்டுப்ப்பாட்டைவிட அதி உன்னதமானது. முழு சரணாகதியின் அனைத்து அம்சங்களும் பராபக்தியில் அடங்கியிருப்பது அதன் சிறப்பியல்பு. ஸ்ரீராமனுக்குச் சேவை செய்வதற்காக அதற்குத் தடையாக இருந்த மனை, மனைவி, சொத்து, உணவு, உறக்கம், தாய் அனைத்தையும் துறந்தான் லக்ஷ்மணன். எத்தனை காலம்? ஒரு நாளா, ஒரு மாதமா, ஓர் ஆண்டா? இல்லை; 14 ஆண்டுகள் தொடர்ந்து செய்தான். அவனுடைய இன்பம், மகிழ்ச்சி அனைத்துமே அவனைப் பொறுத்தவரை ராமன்தான்; அவனுக்குத் தேவையானவற்றை அவர் அருள்வார்; அவனது வாழ்வின் லட்சியம் அவருடைய விருப்பத்துக்கு சரணடைந்து, அவரைப் பின் தொடர்ந்து, அவருக்கு சேவை செய்வதே. எனவே பாரமனைத்தையும் அவர்மீது சுமத்திவிட்டு அவரை மறவாமல், இடைவிடாமல் பின்தொடர்ந்தால் நிச்சயமாக அவர் ஒவ்வொன்றையும் அருள்வார். ப்ரபத்தி எனும் பக்தி வகையின், இயல்பு இது.